



# சம்ஸ்காரம்

அவரது முதல் வெளியீடு, **விஸ்வரூபம்** எனும் சிறுகதை அடங்கியத் தொகுதி. 1979 வெளியிடப்பட்ட நூல், இன்னும் சில சிறுகதைகளைச் சேர்த்துக் கொண்டு, **சம்ஸ்காரம்** எனும் பெயரில் தற்போது வெளிவந்துள்ளது. கருத்தியலுக்கு சம்ஸ்காரம் எனும் கதைத் தொகுதியை எடுத்துக் கொள்ளலாம். முதல் சிறுகதை - இப்படியும் சில ஆத்மாக்கள். மனதில் நின்றக் காட்சிகளைக் கோவையாக்கிய ஒரு கதை. ஒவ்வொருவரும் ஏதோ ஒரு நிலையில், இத்தகையக் காட்சிகளைக் கண்டிருக்கலாம். உளவியலோடு அதனை அனுகியுள்ளார். உணவின் தேடல், உயிர்கள் யாவற்றுக்கும் பொதுவானது. அதே போல், இளமையில் தோன்றும், காமத்தின் தூண்டுதல், அதன் வெளிப்பாடு யாவுமே காட்சியாகியுள்ளன. இந்நூலாசிரியரின் தெற்றென வெளிப்படுத்துவது, இந்த உலக வாழ்வில், ஒவ்வொரு உயிருக்கும், காமமும் உணவும் தேவை என்பதே.

இரண்டாவது கதை, **விசுவரூபம். ஒரு யதார்த்தமான பின்னணி.** கோயில் குருக்கள் மீதான குற்றச் சாட்டு. வயிற்றுப் பசிக்கு உடல் விற்கும் அபலையுடன் தொடர்பு படுத்தி. குருக்களின் நேர்த்தியான செயல், பக்தியில் திளைக்கும் போது அம்மன் சொரூபம் யாவும் அந்த தர்மகர்த்தவுக்கு, நேரடியாக அவரிடம் கேட்க தயங்குகிறது. அவரது உள் மனம், குருக்கள் அப்படிப் பட்டவரல்ல என்கிறது. எனவே, மறுநாள் குருக்களை வீட்டுக்கு வரச் சொல்லுகிறார். அப்போதும், தர்மகர்தாவுக்குத் தயக்கம், அவர் பேசத் தொடங்கும் போது குற்றம் சுமத்திய ஊர் மக்களும் வந்துவிட, நடந்த பின்னணியை விளக்கி, அப்படி யொருபெண் அபலையாக நம் ஆண் வர்க்கம் தானே காரணம். என்னை தவறாக நினைத்து அழைத்தவளை ஆற்றுப் படுத்தி, தையல் இயந்திரம் வாங்கிப் பிழைக்கச் செய்திருக்கிறேன் என்கிறார். உண்மையின் விளிம்பில் மெய்யியல் சார்ந்த சிந்தனை.

மூன்றாவது கதை, **மனிதரில் எத்தனை விதங்கள்,** வலியும் வேதனையும் மிகுந்த ஒரு கூலித் தொழிலாளியின் கதை. துலுக்காணம் அதுதான் அந்த தொழிலாளியின் பெயர். சுமை தூக்குபவர். சென்ட்ரல் ஸ்டேஷனின் தொடங்குகிறது. கதை. பெரிய மூட்டைக்குப் பத்து பைசா ஒரு கனவான் கொடுக்க இன்னும் பத்து பைசா கேட்டபோது, திட்ட, அந்தக் காசை அவரிடமே விட்டெறிய, அதனையும் பையில் எடுத்து வைத்துக் கொள்கிறார் கனவான் தொழிலாளிக்குத் திமிர் எனச் சொல்லி. பசியின் வலி தொடர்ந்து நடந்தான். ஒரு கலியாண வீடு. எதிரே மேடை, **எழைகள் நலம் நாடுவோர் சங்கம்** கூட்டம். உள்ளே நுழையும் துலுக்காணம் விரட்டப் படுகிறான். வெளியில் விழும் எச்சில் இலையில் அவன் கவனம் செல்கிறது. அங்கு வழக்கமாய் வரும் ஒரு பிச்சைக் காரன், அவனுக்குத் தோழமையுடன் ஒரு நாய். இவன் தேடலைக் கண்ட நாய் அவனை குரைத்தே விரட்டுகிறது. குறள், பாரதி பாடல் யாவும் மேடையில் முழங்கப் படுகிறது. எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும் எனும் பாடல் ஒலிக்கும் போது, மயங்கி விழுகிறான் துலுக்காணம். இனி அவன் எழப் போவதில்லை எனக் கதையை முடிக்கிறார். தொழிலாளியாக தன்மானம் காக்க கொடுத்த கூலி போதாதென காசை விட்டெறிந்த துலுக்காணம், பசியின் வேதனையில், எச்சில் இலையை நாடவும் முற்படுகிறான். முதலில் எச்சில் என நினைப்பவன், பின்பு பசி களையும் நோக்கில் செல்லும் போது, தோற்கிறான். மனித இயல்பு, இயன்நிலை வாழ்வு, சமூக சேவை யாவற்றையும் ஒருங்கே சமைக்கிறார் கதாசிரியர்.

நான்காவது கதை, **அஸ்தமனம்.** எங்கோ ஒரு மூலையில் எவர் வாழ்விலோ நிகழ்ந்து கொண்டிருக்கும், வாழ்க்கையின் உண்மை நிலையை உணர்த்துவதுதான் இக் கதை. தாய் தந்தை இல்லாமல், தாத்தா பாட்டியிடம் வளர்ந்த நாயகன் முரளி, திருமணம் வேண்டாம் எனக் கருதி, பின்பு, மாலதியைக் கைதலம் பற்றி, பாசமும் நேசமும் பெருக்கெடுத்து கழிகின்றன. அவளும், இல்லறமென்னும் நல்லறத்தின் பயனாய், பேறுகாலத்துக்குத் தாய் வீடு கனத்த மனத்துடன் அனுப்புகிறான். இடையிலும் சென்று பார்த்து வருகிறான். திடீரென அவள் நோயுற, சிகிக்சைப் பலனின்றி, முடிகிறது ஆயுள். அவனும், அதே நினைவில் அன்ன ஆகாரமின்றி, உண்ணாமல், தன்னை முடித்துக் கொள்கிறான். அவன் நலிவுற்றுக் கிடக்கும் காட்சியில் தொடங்கி, பின்னணியில் கதை சொல்லி, பாட்டி இடையில் வந்து பார்க்க, முதலில் உணவில் மொய்த்த ஈ பின்பு அவன் மீதும் மொய்க்கிறது என முடிக்கிறார் ஆசிரியர். மன வலியே கதையோட்டத்தில் பின்னி வருகிறது அன்பின் வெளிப்பாடாக. ஆனால், முற்றுப் பெறும் போதுதான், உண்மையின் வெளிச்சம் உள்ளத்தைத் தைக்கிறது.

ஐந்தாவது கதை **மாட்டேன் கொடுக்க மாட்டேன்.** வறுமைக்கும் வாழ்க்கைக்குமான போராட்டத்தை விவரிக்கிறது. மீனாட்சியின் மகன் ஸ்ரீராம், மேலே படிக்க விழைகிறான். தந்தை இயலாமையைக் கூறி, அடித்துவிட, முரண்பட்ட மகனைத் தேற்றுகிறாள் தாய். கடன் வாங்க இயலாத நிலையைச் சொல்லும் தந்தை ஒரு புதிய வழியைக் கூறுகிறார். ஒருவன் மகனைத் தத்து கேட்பதாகவும், கொடுத்தால், அவன் இயன்றவரை படிக்கவும் முடியும், வறுமையையும் கொஞ்சம் போக்கி, நகைகள் வாங்கலாம் என்கிறார் தந்தை. தாய் மறுத்து விடுகிறாள். அனைத்தையும் கேட்கும் மகன் புறண்டு படுக்கிறான். மறுத்த தாய், விடியலில் விடியலாய், மகனை தத்து கொடுத்து விடலாம் என்கிறாள் கணவனிடம். அப்போது, மறுத்த மகன், நான் உங்கள் பிள்ளையாகவே இருக்கிறேன். எனக்கு மேற்கொண்டு படிப்பு தர வேண்டும் என்றால், இறைவன் நிச்சயம் செய்வான் என்பதாக முடிகிறது. கதை. மீளா வறுமையுடைய வீட்டில் நிகழும் சிந்தனை யோட்டங்கள் தான் இக்கதையின் கரு.

ஆறாவது சிறுகதை, **சிதைந்த ராகம்.** இந்தக் கதையை கிட்டதட்ட 35 ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் படித்தபோது, கண்களில் நீர் கோத்தது. தாயன்பின் அடையாளமே இக்கதை. சிறிய கோபத்திற்காக, தன்னை நிர்கதியாக விட்டு விட்டுப் போன கணவனுக்குப் பின், சமையல் செய்து, அத் திருமண வாழ்வின் அடையாமாயிருந்த ஒரே மகனை கல்லூரிவரைப் படிக்க வைத்து, அவன் விரும்பிய வண்ணம் நிர்மலா எனும் பெண்ணைக் காதல் மணம் செய்து வைத்து, சிறிது காலத்துக்குப் பின் தன்னை தனியே விட்டு விட்டு, கூட்டுத் தொழில் காரணமாய் மாமனார் வீட்டோடு சென்றுவிட்ட மகன் சுந்தரம் தரும் பணத்தில் தன் காலத்தை கடத்திய தாய், தீடீரென உடல் நலம் குன்றிய, பிழைப்பது கடினம் எனும் நிலையில் நோயுற்றிருந்த மகனுக்காக, வீணையை மீட்டி, இறைவனைப் பிரார்த்திக்கும் தாயின், வேண்டுகோளை செவிமடுத்த இறைவன், தாயை தான் அணைத்து, பிள்ளையை பிழைக்கச் செய்தான் என்பதே கதை. பிள்ளைக்காக வாழ்ந்தாள். அந்தத் தாய் தன் கணவன் காசியில் இருப்பதாய்க் கேள்வியுற்றாள். கண்டு அவரைக் கேட்க நினைத்தது, அக்னி சாட்சியாய் கரம் பிடித்த என்னை அக்னி சாட்சியாக அல்லவோ பிரிய வேண்டும் என்பதாக. இங்கு, கதாசிரியர், ஆணாதிக்கத்தினை மறைமுகமாக சாடுகிறார். மேலும், முதல் பத்தியிலே, விணையை எடுத்து அந்த தாய் பிரார்த்திப்பதாக, தொடங்கும் வரிகளில், உண்மையான இறையன்பை, இறைவனிடம் கொள்ளும் வேண்டுகோளை தாயன்பின் மூலம் வெளிப்படுத்துகிறார் ஆசிரியர்.

ஏழாவது கதை, **மாணிக்கம் ஒரு வெறும் கல்.** கதை நிகழும் தளம் ஒரு பேருந்து. பயணிப்பவர்களின் செயல் பாடுகள் மீதான நிலைப்பாட்டில் கதையைத் தொடங்கி முடிக்கிறார் நூலாசிரியர். பிக்பாக்கெட் நிகழுகிறது. வரிசையாக நிற்கும் நால்வரில், இரண்டாவதாக நிற்கும் கைபை காரன் என அறிமுகமாகிறவன் தான் நாயகன் ஆகிய இந்த மாணிக்கம். இவனுக்கு பின்னால் நிற்கும் ஒரு மீசைக்காரன், இவனுக்கு முன்னால் நின்ற ஒரு சில்க் ஜிப்பா பையிலிருந்து பணத்தைத் திருடி, தன் பின்னால் இருக்கும் ஒரு பச்சை சட்டை ஒல்லி ஆசாமியிடம் கொடுத்து விடுகிறான். ஓரிடத்தில் பேருந்தில் போலிஸ் ஏறுவதைக் கண்ட ஒல்லி ஆசாமியான பச்சை சட்டைக் காரன் மீசைகாரன் கொடுத்தப் பணத்துடன் வெளியேறி விடுகிறான். அதன் பின்னால் சில்க் ஜிப்பாக் காரன் பணம் தொலைந்தது குறித்து அலற அகப்பட்டவை இந்த கைப்பைக் காரன் எனப் பட்ட மாணிக்கம், பேருந்திலே யே அடிவாங்கி, திருடனாக குற்றம் சுமத்தப் பட்டு, காயங்களுடன் அருகில் ஒரு காவல் நிலையம் அழைச்செல்லப் படும் போது, தான் அந்தப் பணத்தை திருடவில்லை என்கிறான். அன்மையில் நகைத் திருட்டு போன, தனபால் கடையில் வேலை பார்த்தவன் என்று கூற இருவர் கைது செய்யப் பட்டது, ஆய்வாளருக்கு நினைவுக்கு வருகிறது. மாணிக்கத்தின் கைபையில் கட்டு கட்டாய் பணம், நகைகள். தனபால், தன்னிடம் வேலை செய்த மாணிக்கம் நல்லவன் என்றதும் ஞாபகம் வருகிறது. இருவேறு நிகழ்வுகள். குற்றம் ஒன்றே. மாட்டியவன் திருடனா இல்லையா எனச் சொல்லவில்லை. கதையின் பெயரிலிருந்தே நாம் உணர வேண்டும், அவன் திருடினான். சில்க் ஜிப்பா காட்சியைக் கண்டு வாயடைத்து நின்றான் என முடிகிறது கதை.

எட்டாவதான **இதோ ஒரு காதல் கதை**, மிகவும் அற்புதமாகப் பின்னப் பட்டுள்ளது. நிகழ்விடம் ஒரு சேரிப் பகுதி. ஸ்டேசன் வஸ்தாது என அறிமுகத்துடன் வரும் நாயகன், கோதண்டம் ஒரு ரவுடி. அப்பகுதியில், டீக்கடைக் காரரிடம் காசுதராமல், சண்டையிட்டு, ஜெயிலுக்குப் பொனவனாக அறிமுகம் ஆகி, கருப்பாயி என்பவள் குடிசை முன் நிற்கிறான். அவள்தான் மனைவி என்பது பின்னால் தெரிகிறது. ஜெயிலுக்கு ஏன் பார்க்க வரவில்லை என கோபித்து முரடாக நடக்கும் போது, கர்பிணியான அவள் வயிற்றில் குத்த, அவள் மயங்கி கீழே விழ, பரிதாபப் படுகிறான். இரவு முடிந்து, விடியும் போது, மனமும் தெளிவடைய, அரும்பும் காதலை விவரித்து கதை முடிகிறது. அந்த மனைவி கருப்பாயி முரட்டுக் கனவனுக்காக அதே டீக்கடை நாயரிடம் டீ வாங்க, அவரும் கேட்டுவிட்டுத் தனக்குள் புரியாமல் சிரித்துக் கொள்கிறார். அற்புதமான இவரது கதை சொல்லும் பாணி நெகிழ வைக்கிறது. சம்பவங்களை இணைத்தல், உரையாடல் யாவும். மனித உளவியல் சார்ந்ததாகவே கதைகள் படைக்கப் பட்டுள்ளன.

ஒன்பதாவது சிறுகதை **உறுத்தல்.** இக்கதையின் நாயகன், பள்ளியில் படிக்கும் விட்டல். பொதுவில், பொருளாதார நிலையில், நடுத்தரமாகவோ, இழுபறியாகவோ இருக்கும் வீட்டுப் பிள்ளைகளிடத்தில் நடக்கும் ஒன்று. நண்பனிடத்தில், கைமாற்றும், சீட்டாடித் தோற்றுப் போனதில், தரவேண்டிய பணத்தை, நண்பனின் சீற்றமான, சண்டையில், அவனது தந்தையிடம் சொல்வேன் எனும் நிலையில், யோசித்து, தன் அத்தை மகனிடம் கேட்க, பணம் வந்து சேருகிறது. தந்தைக்கு தெரிந்துவிடுகிறது, நண்பனும் தந்தையிடம் சொல்லிவிடுகிறான். ஐயத்தோடு வீட்டில், அறியாதவன் போல் நுழைபவனை, தந்தை ஏதும் கேட்க வில்லை, நண்பன் சொன்னான் எனவும் கடிதத்தைக் கொடு எனவும் சொல்ல, தாய் மட்டும் இப்படியா செய்வாய் எனும் போது, மனம் உடைந்து, தாயின் மடியில் வீழ்ந்து அழுவதாய் முடிகிறது கதை. ஈண்டு, உளவியல் வழியில், மனம் சிதைக்கப் படாத நிலையில், அதாவது, திட்டோ அடியோ விழாத நிலையில் அவன் தன் தவறை உணர்கிறான். அவன், விட்டல் கதையின் நாயகன், திருந்தி வாழ்ந்தான் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

இந்த பத்தாவது சிறுகதையான **சம்ஸ்காரம்,** சம்ஸ்காரம் எனும் அந்த நிலைப் பாட்டினை அழகுடன் விளக்குவதாகவே அமைகிறது. இதுவே, இக்கதைத் தொகுதியின் பெயராகவும் அமைந்துள்ளது. துறவு பூண்ட மகன், தனது தாயின், இறுதி நேரத்தில் வந்து சேருகிறான். அவள் இறக்கும் நிலையில் உள்ளாள். அந்த தாயின் பெயர் ஞானம் என்கிறது கதை. அந்த ஞானத்தை தேடிய அந்த மகன் கொண்ட துறவு, விரக்தியினால் விளைந்தது அல்ல. நன்நிலையில் விட்டு விலகியது. அவனை, நித்தியன், ஆனந்தன், நித்தியானந்தன், வந்திருப்பது ஒரு சம்ஸ்காரம் கருதியே என்கிறார் கதாசிரியர். எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு வந்த மகனுக்காகத் தட்டுத் தடுமாறி சமைத்த தாய் ஞானம். தந்தையைப் பற்றி ஞாபகப் படுத்திய தாய், அவ்வூர் புராதனக் கோயில், ஸ்தல விருக்ஷம் எனும் மரத்தின் கீழே நித்திரையில் ஆழ்ந்தது போன்று, அந்த சங்கரன் அசையாதிருந்த நிலை என்பதாக, கதையை நகர்த்துகிறார். அன்று அந்த ஏகாதசியில் தாய் முக்தி அடைவாள் எனக் கருதி அந்த மகனாகிய சங்கரன் வந்துள்ளான். அவ்வாறு நிகழ, அவன் பங்காளிகள், சன்னியாசி காரியங்கள் செய்யக் கூடாது எனத் தடுக்கவும், ஊர் வேடிக்கைப் பார்க்கவும், தாய்க்கு எரியூட்டி, ஆற்றில் இறங்கி, மூன்று முழுக்குப் போட்டுவிட்டு, எதிர்கரையில் சென்றதை இன்னும் ஊர் மக்கள் பேசிக்கொள்தாக முடிகிறது கதை. அந்த தாயின் ஈமக் கிரியைதான் சம்ஸ்காரம். இக்கதை, ஆதிசங்கரர், பட்டினத்தார் ஆகியோரது, வாழ்வியல் நிகழ்வைச் சுட்டுவதாக அமைந்துள்ளது.

இந்நூலில் பதினோராவது சிறுகதையாக அமைவது, அக்னி என்பதாகும். இந்தச் சூரியான, கதையின் நாயகன், ஒரு துன்பியல் வாதியாகக் காணப் படுகிறான். அவனது பிறப்பில் தாய் இறந்து விட, மாமா வீட்டில் வளர்ந்து, மாமன் மகளை ஏமாற்றிக் கரம்பிடித்து, அவளையும் அழவிட்டு, நீ இப்படியே ஒருநாள் அழிவாய் எனவும் அவளும், அவனால் ஏமாற்றமடைந்த பார்ட்னரும் சொல்ல, அதுதான் இறுதியில் நடக்கிறது. போதையில், அவன் அணைக்காமல் விட்ட சிகரெட் துண்டு, தீயாய்க் கிளம்பி அவன் கண்முன்னேயே, அவன் அலுவலகம் எரிந்து கொண்டிருக்க, அவனும் அதனுள் வீழ்கிறான் என்பதாக முடிகிறது கதை. பிறப்பின் வழியில், தாய் இறந்து, பிறந்த நிகழ்வால் அவன் அப்படி யானானோ, அது எப்படி என்பதை கதாசிரியர் வாசிப்போர் ஊகத்துக்கே விட்டு விடுகிறார்.

இந்நூலின் பன்னிரண்டாவது சிறுகதை, **பாலைவனத்துப் பறவைகள்.** இஃது ஒரு சினிமாக் கலைஞனுக்கு, ஏற்படும் நிகழ்வாக அமையும் கதை. நிழலைக் காதலென்று நிஜத்தில் ஏமாந்தவன், நிழலான படத்தில், நடிக்கும் போது, நடிகன் குமார், பேசும் வசனங்களில், (உரையாடல்) மனம் வெதும்பி, தழுதழுத்துப் பேசி நடித்ததில் இயக்குநர் யோகேஷ், மனம் மகிழ்ந்து படம் வாகை சூடும் என மகிழ்ந்து கொள்கிறார். கதையில் காதலி மனைவியாகி, இன்னொரு குழந்தைக்கு வேண்டி, இறந்துவிடல். உண்மையில் நடிப்பில் மிளிர்ந்தது, குமாரின் உள்ளக் குமுறலே. இப்படி தனக்கொரு மனைவி வாய்க்கவில்லையே என்பதே. நண்பனும் செக்ரெட்டரியுமான, கிருஷ்ணன், தன் மனைவி ராஜியுடன் இருப்பதைப் பார்த்து வெதும்ப, அது தவறல்ல என்பதைப் போல அவன் மாமனார் இருந்தது, மூவரும் திட்டமிட்டுச் செயல்பட்டது தெரியாமல், சொத்துக்களையெல்லாம், அவர்கள் பெயரில் வாங்கி , தான் ஏமாந்ததை உணர்கிறான். தன்னிடம் ஏதும் இல்லாது போனது நினைவுக்கு வந்து வேதனை செய்த நேரத்தில் அந்தப்படம் நடிக்கும் சூழல். இது ஏமாற்றும் அல்லது, ஏமாறும் நிலையை காட்டுகிறது. எங்கோ ஒரு மனிதனுக்கு நிகழ்ந்து கொண்டிருப்பதுதான் இது. இதற்கு இப்பெயர், பாலைவனத்து பறவை , அதாவது பாலையில் வாழும் பறவைகள், நீரைதேடி ஓடுவது போல, காசைத்திருட ஒரு கூட்டம் திட்டமிட்டு அலைகிறது என்பதாக.

இந்நூலில், பதிமூன்றாவது கதையாக இடம்பெறும், **அம்மா.** இதனை நெடுங்கதை என்கிறார். நூலாசிரியர். இதுவும், உறுத்தல் போலே, உளவியல் சார்ந்ததுதான். இந்தக் கதையின் நாயகன், கிருஷ்ண மூர்ர்ர்தியைப் பற்றி நினைக்கும் போது, முதல் மரியாதை சினிமாவில், பாரதிராஜா அறிமுக உரைதான் ஞாபகம் வருகிறது. எங்கோ ஒரு புல்லாங்குழல், ஒரு சோக ராகத்தை இசைத்துக் கொண்டு தான் உள்ளது. என்பதைப் போல், சோகமே சுற்றிவர வாழ்பவன் தான், நாயகன் கீமு எனப்பட்ட கிருஷ்ண மூர்த்தி. ஆற்றில் அடித்துச் செல்லப் பட்ட, தம்பி, அதனால் நோயுற்று இறந்த தாய், சந்நியாசம் கொண்ட தந்தை. பின் அத்தை வீட்டில் வளர்தல். தம்பி தாயிடம் அமுதுண்ணும் போது, தனக்கும் எனக் கேட்டல், மனதில் எங்கோ நின்று பொன, வேட்கை, அத்தை வீட்டில், பசுவைக் கண்ட வுடன், செயல் படுத்த முனைய, அத்தைப் பெண் அபிதா, கண்ணுற்று, கிண்டல் செய்ய, ஆத்திரத்தில், சில்மிஷம் செய்ய, அதனை எதார்த்த மாக எடுத்துக் கொண்டு, பக்குவை படுத்திய அத்திம்பேர் (மாமா) . அதே அபிதா மனைவியாக, இரண்டைப் பறிகொடுத்து மூன்றாவதான தன் குழந்தைக்கு அமூதூட்டும் போது, கேட்க, விளையும் சம்பாஷனைகள், சில யதார்த்தங்களை உள்ளடக்கி நிறைகிறது கதை. அதாவது, வாடா போடா என்றவள், கணவனானதும் தன்னை மாற்றிக் கொண்டது. ஒருநாள், அலுவலகம் விட்டுத்திரும்பும் போது, மனைவியும் குழந்தையும், இறந்து விரைத்துக் கிடந்தது. அதன் பின் நடைப்பிண வாழ்க்கை. அங்கிருந்துதான் கதை தொடங்கி, கடந்த காலத்தை விவரித்து, சுற்றுலா செல்லுமிடத்து, எழும் மன ஓட்டங்கள், கடைசியாக, அமுதூட்டும் கற்சிலையைக் கண்ட பொழுது, ஈர்ப்பில், அமுதுண்ணும் வேட்கை எழ, மற்றவர்கள் தூற்றும் நிலையில், உதடு கிழிந்து ரத்த முத்து புஷ்பித்தது எனமுடியும் கதை.

இத்தொகுப்பில் காணப்படும் பதிநான்காவது சிறுகதையான, **கூடு விட்டுக் கூடு…** ஒரு நடுத்தர குடும்பத்தின், வாழ்க்கைப் போராட்டம். சந்துரு எனப்பட்ட சந்திரசேகரின் பெரியப்பா, சுந்தர்ராமன் குடும்பம் இல்லாதவர், பர்மாவில் சம்பாதித்தவர், நண்பர்களுடன் இருந்தவர், இறந்த செய்தி, உலுக்குகிறது. ஏற்படும் சிலவை நினைத்து. மனைவி ராஜியின் சேமிப்பு, கேட்க வேண்டிய சூழல், வந்த அரியர்ஸ், இப்படிப் பலவுமாய், எண்ணி, தந்தையார் நடேசன், ஈமக்கிரியைகள் செய்ய வேண்டிய சூழலில், மகளைப் பள்ளியில் விட்டு, மனைவியுடன் சென்று பார்த்த பின்பு, அலுவலகம் அனுப்பி விட்டு, அலுவலக வேலைப் பளுவும் மனக்கண்ணில் வந்து போகிறது. ஆட்டொவில் போகச் சொல்லும் போது, பார்க்கும் மனைவியை, இதுவும் சிலவுக்கணக்குதான் என்கிறான். வீட்டில், தலைப் பிரசவத்துக்குக் காத்திருக்கும், லோச்சி எனும் சுலோச்சனா, அதற்காக ஏற்படப் போகும் சிலவு யாவும் மனத்தில் வந்து போனது. சாஸ்திரியைத் தேடி, குளக்கரைக்குப் பொனது, அவர் அம்பியைக் காட்டிவிட, அம்பி சுப்புணியை அனுப்பியது. கர்ம பூமிக்கு சொல்ல வேண்டும் எனச் சொல்ல, அங்கு கண்ணாயிரத்தைக் கண்டது, அவனும் சுப்புணியும், மிகவும் நட்பு ரீதியாகச் செயல் பட்டது. வெவ்வேறு நிலையில், சூழலில் உள்ள இருவரின் நெருக்கம் யாவும் சந்துருவுக்கு வியப்பளித்தது. பூணூல், எனும் அடையாளம் தேவை, விபூதி இட்டால், தெரியும் என அவனது தாய் சொன்னது யாவும் சாஸ்திரியைச் சந்தித்த போது, வந்து போனது. (இவ்விடம் பல நாட்களுக்கு முன் படித்த ஒரு சிறுகதை நினைவுக்கு வந்தது. ஒருவனுக்கு பயணிக்க அவசரமாக டிக்கெட் தேவைப் படுகிறது. ஏதோ முகவர் மூலம் பெறுகிறான். பயணியின் பெயர், டேவிட். அப்பெயரில் ஒரு குற்றவாளியை தேடி, அவன் பெட்டிக்கு காவலர் வருகின்றனர். தான் டேவிட் அல்ல எனும் இவன் கூற்றை காவலர்கள் நம்பாத போது, தனது சட்டையைக் கழற்றிக் காண்பிக்க, ஒரு காவலர் சொல்கிறார், டேவிட் எனப் பெயர்

வைத்துக் கொண்டவன் பூணூல் அணிய மாட்டான். இவன் கூறுவது உண்மையே என்க, அவன் விடுவிக்கப் படுகிறான். அப்போதுதான், அவன் உணர்ந்தான், தாயின் பிடிவாதத்தில் அணிந்து கொண்டது எவ்வாறு உதவியது என.) இனி கதைக்கு வருவோம். பெரியப்பாவின் நண்பர் லிங்கம் என்பவர், சந்துருவுக்கு உதவுகிறார், அனைத்து இடங்களுக்கும் செல்ல. முழுமையாகச் செய்ய வேண்டும், தடபுடலாக வேண்டாம் என்கிறான். காரியம் முடிந்து, வீட்டுக்கு வந்து குளித்து முடித்துப் படுப்பவனுக்கு, இனி அட்டுத்தடுத்தக் காரியங்களுக்கும் இன்னும் சிலவு எனச் சாஸ்திரி சொன்னதும், அடுத்துத் தங்கையின் பிரசவம் யாவும் நினைவுக்கு வந்து, சந்துருவுக்கு மனம் மிகவும் குழம்புகிறது. பித்து பிடித்தாற்போல் உறங்கிப் போகிறான். ஒரு கொசு ரிங்காரமிட்டு அவையேச்சுற்றி வருகிறது. அது தனது பெரியப்பாதான், கொசுவாகப் பிறவியெடுத்து, பேன் வாங்காததை கிண்டல் செய்வதாய் நினைத்துக் கொண்டான். அப்போது, அவன் அன்னை கூறியது நினைவுக்கு வருகிறது. அதாவது, பெரியப்பா நம் குடும்பத்தில் மிகவும் பாசம் உள்ளவர். ஆகையால், லோச்சியின் வயிற்றில் வந்து பிள்ளையாகப் பிறக்கப் போகிறார். பிள்ளைப் பேற்றின் சிலவையும், பெரியப்பாவுக்குப் பட்ட கடனையும் நினைத்து வாய்விட்டுச் சிரித்தான் சந்துரு. மனம் லேசானது என முடிகிறது கதை. நடுத்தர வர்க்கத்தின் பொருளாதாரப் பின்னணி, சடங்குகள், சம்பிரதாயம் என யாவும், அச்சுறுத்துதல் அழகாக விவரிக்கிறார் கதாசிரியர். இறப்பின் வருத்தத்தைக் காட்டிலும், அது கூட்டும், செலவின் இழப்பே பெரியதாகிறது என்பதே இயன் நிலை.

இந்நூலின்கண், பதினைந்தாவது கதையாகவும், கடைசி கதையாகவும் விளங்குவது, **அச்வமேதம்.** இதுவும் ஒரு உளவியல் சிந்தையின் பார்பட்டதே. நரசிம்மன் என்பவரது அலுவலகத்தில் வேலை செய்யும், ராமன் எமகாதகன், காமுகன். அவனது செயல்களை இரசிப்பது, அவனை தூண்டுவது போல், பேசுவதே நரசிம்மன் வேலை. ஒருநாள் விளையாட்டாக, என் மகளை உனக்கு கட்டிக் கொடுத்திருப்பேனே என்கிறார், ராமனிடம் நரசிம்மர். இராமன் வாய்ப்பைத் தேடிக் காத்திருப்பது போல், ஒன்று அமைகிறது. ராமனை விருந்துக்கு அழைக்கிறார், நரசிம்மன், அவரது மனைவி, விரும்பாமல், ராமனது தோற்றம் முதலானவற்றை, விமரிசித்து, ஒரேயொரு முறை என்கிறாள். இந்நிலையில், உறவினருக்கு உடல் நலமில்லாது போக, நரசிம்மன் மனைவியுடன் போக வேண்டியதாகிறது. ஆனால், இராமன், குறிப்பிட்டபடி, ஒன்பது மணிக்கு வந்து சேருகிறான். வீட்டில் யாவரும் இல்லை என்பதைத் தெரிவித்து, தண்ணீர் கொடுக்கும் நரசிம்மன் மகளிடமே தனது கைவரிசையைக் காட்ட முயலுகிறான் இராமன். நரசிம்மன் மகள் சுதாரித்து செருப்பால் அடித்து, இராமனை வெளியேற்றவும், நரசிம்மன் மனைவியுடன் உள்நுழையவும் சரியாக அமைகிறது. இராமன் செயலை வைத்து கதாசிரியர், அவனை தாய்மடி மறந்தவன் என்கிறார். தன்வினைத் தன்னைச் சுடும் என்பது, நரசிம்மனுக்கு உரைக்குமோ என்னவோ!

இப்படியாக, மொத்தம் பதினைந்து, கதைகள். **உறுத்தல், அம்மா, விசுவரூபம்** ஆகியவை அற்புதமான, சிறிய தவறு செய்வோரை எங்கனம் கையாள வேண்டும் என்பதை உளவியல் முறையில், மனிதன் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் அழகுடன் விவரிக்கின்றன. இந்நூலின் பெயரைத் தாங்கும் **சம்ஸ்காரம்** எனும் கதை, வாழ்க்கையின் பரிணாமத்தை, இறப்பு என்பது, இயன்நிலை என்பதையும், ஆதி சங்கரர் பட்டினத்தார் வழியில் தாயின்கடன் முடிக்க வேண்டும் என்பதையும் கூறுகிறது. இஃது ஒரு அற்புதமான கதைத் தொகுதி. அனைவரும் வாங்கிப் படித்து இன்புறுங்கள்.

நூலாசிரியரின் பெரும்பாலான நூல்களை வெளியிட்டிருப்பது,

**சந்தியா பதிப்பகம்.**

